Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 33

திங்கட்கிழமை
29 டிசெம்பர் 2025

மார்கழி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

எல்லைதாண்டிய மீன்பிடி

## தமிழக மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ.29
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் மூவரைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு »11

# டக்ளஸின் வசமிருந்த 19 துப்பாக்கிகள் எங்கே?

## துருவுகின்றது சி.ஐ.டி

### 9ஆம் திகதிவரை விளக்கமறியல் விசாரணைகள் தொடர்கின்றன



**யாழ்ப்பாணம், டிசெம்பர் 29**
**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தா விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு இராணுவத்தால் வழங்கப்பட்ட 19 துப்பாக்கிகள் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீவிர விசாரணைகளில் இறங்கியுள்ளது.** »11

## மீனவர்களை விடுவிக்கக்கோரி தமிழக முதலமைச்சர் கடிதம்

கொழும்பு, டிசெ.29
இலங்கைக் கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு நேற்றுக் »11

## வலிப்பு நோயால் இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.29
வலிப்பு நோய் ஏற்பட்டு இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம், மடம் வீதியைச் சேர்ந்த மகாலிங்கம் நிரோஜன் (வயது-30) என்ற இளைஞரே உயிரிந்தவராவார்.
நேற்று அதிகாலை »11

## 62 பல் சத்திரசிகிச்சை நிபுணர்கள் வடக்கு – கிழக்குக்கு இணைப்பு



கொழும்பு, டிசெ.29
62 பல் சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கான நியமனக் கடிதங்கள் சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் பிரதான கேட்போர் கூடத்தில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் இன்று வழங்கப்படவுள்ளன.
இந்த நியமனங்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் »11

## அவசரகால நிலை நாட்டில் நீடிப்பு

### வெளியிடப்பட்டது விசேட வர்த்தமானி

கொழும்பு, டிசெ.29
நாட்டில் நிலவும் பொதுப் பாதுகாப்பு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தற்போது நடைமுறையில் உள்ள பொது அவசரகால நிலைமை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது என்று அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதியின் செயலாளர் நேற்று ஞாயிற்றுக் »11

## 2026 இல் 26 பொது விடுமுறைகள்

கொழும்பு, டிசெ.29
2026ஆம் ஆண்டுக்கான அரச நாள்காட்டியில் 26 பொது விடுமுறை நாள்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அதிக பட்ச விடுமுறைகளாக 4 விடுமுறை நாள்கள் »11



கைமாறும் மத்தள!
விரிவு
பக்கம்:-03

## சமஷ்டிக் கட்சியான தமிழரசு சமஷ்டி பற்றி பேசாதிருக்குமா?



### சி.வி.கே.சிவஞானம் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.29
இலங்கை தமிழரசுக் கட்சி சமஸ்டி கட்சி. அவ்வாறிருக்க சமஷ்டி தொடர்பாக நாங்கள் பேசாமல் விடுவோமா? இந்திய வெளியுறத்துறை அமைச்சரிடம் நாம் சமஷ்டியை வலியுறுத்தினோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித் »11

புரச்சித் முரளி

"பரவாயில்லையே இன்னும் அவைக்கு தங்கட கட்சியின்ர கொள்கையாவது நினைவிருக்கு கண்டியளோ"

## தங்கநகை திருட்டு; சந்தேகநபர் கைது

கொழும்பு, டிசெ.29
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகம்புளியடியில் நடந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடந்த 18ஆம் திகதி காலை வீட்டுக்குள் புகுந்து 10 லட்சம் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டிருந்தன என்று வீட்டின் உரிமையாளர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.
முறைப்பாட்டுக்கு அமைய »11

## கலாசாரச் சீரழிவு நடவடிக்கை; யாழில் விடுதிகள் சோதனை!

### ஆறு பெண்கள், இரு ஆண்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ.29
யாழ்ப்பாணத்தில் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்ற குற்றச்சாட்டில் இரு விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு, ஆறு பெண்களும், இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கச்சேரியடி மற்றும் ஈச்சமோட்டைப் பகுதிகளில் உள்ள இரு விடுதிகளே யாழ்ப்பாணம் பொலிஸாரால் »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 28.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4299 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 01 61 67 68 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 28.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1366 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 01 03 35 41 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 28.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0325 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 6 1 4 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 28.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2405 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 09 65 68 75 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 28.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6057 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 8 0 4 9 2 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 28.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2087 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 27 32 51 64 |
| விசேட எழுத்து | F |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 28.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0173 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 14 53 |

# ஜனாதிபதி நிதியத்தில் முறைகேடுகள் அரசியல்வாதிகளால் பலகோடி ஏப்பம்

## கணக்காய்வில் தகவல்

கொழும்பு,டிசெ.29

**ஜனாதிபதி நிதியத்திலிருந்து 56 நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் சட்டதிட்டங்களை மீறி ரூ.130 மில்லியனுக்கும் அதிகமான தொகையை (சுமார் 13 கோடி) மருத்துவ உதவியாகப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

விண்ணப்பப்படிவம், மாதாந்த வருமான வரம்பு, பிரதேச செயலாளரின் அறிக்கை, நிதி, சொத்துகள் மற்றும் மருத்துவ உதவி வரம்புகள் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளாமல் இந்தப் பண உதவி வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நிதி உதவிகள் 2005 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஜனாதிபதி நிதியிலிருந்து கடன்களை வழங்குவதற்கான திட்டங்கள் இல்லாவிட்டாலும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ரூ.10 மில்லியனுக்கும் அதிகமான மருத்துவக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவை மீள வசூலிக்கப்படவில்லை. முன்னாள் பிரதமர் ஒருவருக்கும் கிட்டத்தட்ட ரூ.30 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. தேசிய கணக்காய்வு அலுவலத்தின் அறிக்கைகளின் படி, ரூ.13.7 மில்லியனுக்கும் அதிகமான தொகை மீள அறவிட்டுக் கொள்ளும் அடிப்படையில் வழங்கப்பட்டபோதிலும் குறித்த பணம் மீளப் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

பொதுமக்களின் வரிப்பணம் உரிய தகுதி இல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட இழப்பாகவே பார்க்கப்படுகிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 28.12.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0765 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| V | 7 2 9 1 8 7 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.12.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3031 | V | 29 46 47 77 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.12.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 13 41 59 77 | 5192 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 28.12.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0861 | 03 45 49 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.12.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 24 31 42 48 | 4743 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 28.12.2025 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 31 | 22 31 65 72 | 2207 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.12.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 07 36 39 59 | 2857 |


# மஹிந்த ராஜபக்சவின் அரசியல் பணி தொடரும்

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.29

கொழும்பில் இருந்தவாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தமது அரசியல் பணியைத் தொடர்ந்து முன்னெடுப்பார் என்று அவரது மகன் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவதற்குரிய சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர், அரச மாளிகையில் இருந்து மஹிந்த ராஜபக்ச வெளியேறினார். கொழும்பு விஜேராம மாவத்தையில் இருந்து அவர் தங்காலை கால்டன் இல்லத்துக்குச் சென்றார். இந்த நிலையில் அவர் மீண்டும் கொழும்பு வந்துவிட்டார்.

எமது கட்சிக்கு அவர் தொடர்ந்து ஆலோசனை வழங்கிவருகின்றார். கட்சியை வழிநடத்தியும் வருகின்றார். கொழும்பில் இருந்து அந்தப் பணியைச் செய்வார். அங்கிருந்தே அரசியல் நடவடிக்கையிலும் மஹிந்த ராஜபக்ச ஈடுபடுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



# கிறிஸ்மஸ் பொதுமன்னிப்பில் கைதிகள் விரைவில் விடுவிப்பு

கொழும்பு,டிசெ.29

வருடாந்திர கிறிஸ்மஸ் பொதுமன்னிப்பின்கீழ் கைதிகள் விடுதலை விரைவில் நடைபெறும் என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. கிறிஸ்மஸ் தினத்தன்று கைதிகள் விடுதலை நடைபெறாத முதல் சந்தர்ப்பம் இந்த ஆண்டாகும். விடுதலைக்குத் தகுதியான கைதிகளின் பட்டியல் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அமைச்சகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கைதிகள் தொடர்பான கூடுதல் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிர்வாக நடைமுறைகள் முடிந்ததும் கிறிஸ்மஸ் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்ய அனுமதிக்கப்பட்ட கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மாகாணசபைத் தேர்தல் அரசு காலம் தாழ்த்தும்

## ராஜித தெரிவிப்பு



கொழும்பு,டிசெ.29

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வீழ்ச்சிப்பயணம் ஆரம்பித்து விட்டது. எனவே, மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாது என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெல்லும் போது, தேசிய மக்கள் சக்தி வலுவாக இருந்தது. அதனால் தான் உள்ளூராட்சி சபைகளில் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஆதரவு வழங்கினர். எனினும், இந்த அரசாங்கம் ஓடாது, நிச்சயம் விழும் என்று எதிரணி உறுப்பினர்கள் நம்புகின்றனர். உள்ளூராட்சி சபைகள் ஊடாக எவ்வித அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. அதனால்தான் எதிரணி உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்கின்றனர். மக்கள் மத்தியில் அரசாங்கம் நம்பிக்கை இழந்து வருகின்றது. மாகாணசபைத் தேர்தலை இந்த அரசாங்கம் நடத்தாது. ஏனெனில் ஒரு சபையைக்கூட வெல்லமுடியாத நிலைமை அவர்களுக்கு உள்ளது.- என்றார். (ச-44)

# ரோட்டரி இன்ஸ்டிடியூட் மாநாடு அடுத்தாண்டு இலங்கையில்!

21 ஆண்டுகளுக்குப் பிறகு 2026 ஆம் ஆண்டில் நடைபெறும் ரோட்டரி இன்ஸ்டிடியூட் மாநாட்டை நடத்தும் தளமாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டு டிசெம்பர் 18 முதல் 20 வரை இலங்கை ரோட்டரி இன்ஸ்டிடியூட் 2026 ஆம் ஆண்டின் மாநாடு நடத்தப்படவுள்ளது. 21 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த முக்கியமான நிகழ்வை இலங்கை மீண்டும் நடத்தவுள்ளது. 'ரோட்டரி மண்டல இன்ஸ்டிடியூட்' என்பது ரோட்டரி இன்டர்நேஷனல் மண்டலங்கள் 4, 5, 6 மற்றும் 7 க்கான ஆண்டு தலைமைத்துவ மாநாடாகும். இதில் இந்தியா, இலங்கை, பூட்டான், நேபாளம் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் அடங்கும். இந்த மாநாட்டில் தற்போதைய, முன்னாள் மற்றும் வரவிருக்கும் ரோட்டரித் தலைவர்கள் அதிகாரிகள் மற்றும் மூத்த ரோட்டரி அதிகாரிகள் ஒன்றுகூடி, மனிதநேயத்துடன் தொடர்புடைய சமகால பிரச்சினைகள், சமீபத்திய போக்குகள் மற்றும் பிராந்தியத்தின் சிறந்த நடைமுறைகள் குறித்து விவாதிப்பதுடன், தலைமைத்துவத்தில் சிறந்து விளங்கும் முக்கியமான ஆளுமைகளையும் மேடையில் அறிமுகப்படுத்தவுள்ளன. இதன் மூலம் இலங்கை சுற்றுலாத்துறைக்கு 10 இலட்சம் அமெரிக்க டொலர்களைவிட அதிகமான வருமான பங்களிப்பு கிடைக்கும் என, ரோட்டரி இன்ஸ்டிடியூட் 2026 இன் தலைவர் கௌரி ராஜன் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவதைத் தவிருங்கள்!

### சார்க் பத்திரிகையாளர்கள் ஒன்றியம் வலியுறுத்து

**கொழும்பு, டிசெ.29**

**இலங்கை அரசாங்கம் ஊடக சுதந்திரத்தை நசுக்குவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளை வன்மையாகக் கண்டிப்பதாக சார்க் பத்திரிகையாளர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் தலைவர் ராஜு லாமா தெரிவிக்கையில்,
கருத்துச் சுதந்திரத்தை மட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் பொலிஸ் மிரட்டல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தனியார் தொலைக்காட்சி வலையமைப்பு வெளியிட்ட செய்தி தொடர்பான பொலிஸாரின் நடவடிக்கை, சுதந்திர ஊடகம் மீதான நேரடித் தாக்குதலாகும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த 15 மாதங்களாக ஊடக ஒடுக்குமுறையின் ஆதிக்கப் போக்கைக் காட்டிவருகிறது. ஜனநாயக விழுமியங்களைநிலைநிறுத்துவதாக உறுதியளித்த அரசாங்கம் இன்று 'சர்வாதிகாரப் போக்கைக்' காட்டுகிறது. விமர்சகர்களை மௌனிக்க வைப்பதற்கு பொலிஸ் அதிகாரத்தை அரசு தந்திரோபாயமாகப் பயன்படுத்துவதை நிறுத்தி சர்வதேச ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக நெறிமுறைகளை இலங்கை அரசு பாதுகாக்க வேண்டும் - என்றார். (ச-இ)



## நாட்டின் கடன்சுமை இந்தாண்டு உயர்வு

கொழும்பு, டிசெ.29
மத்திய அரசாங்கத்தின் கடன்சுமை இந்த ஆண்டு அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் இறுதியில் 28,738 பில்லியன் ரூபாவாக இருந்த மத்திய அரசாங்கத்தின் கடன், இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் 29,675 பில்லியன் ரூபா வரை உயர்ந்துள்ளது.

இதேவேளை 2025ஆம் ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 5.5 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதேவேளை கடந்த 11 மாதங்களில் அரசாங்கத்தின் வருமானம் மற்றும் மானியங்கள் 4961.8 பில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளன. (ச-இ)

## இலங்கைக்கு கஞ்சா கடத்திய எண்மர் ஆந்திராவில் கைது

சென்னை, டிசெ.29
இலங்கைக்குக் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்திர-ஒடிசா எல்லைப் பகுதிகளில் விளையும் கஞ்சா இலங்கைக்கு கடத்தப்படுவதாகக் கண்டறியப்பட்ட முதல் சம்பவம் இதுவாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமான நபராக 28 வயதுடைய காடே ரேணுகா என்பவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். விசாகப்பட்டினம் மாவட்டம் சாந்தகாவிட்டிப் பகுதியைச் சேர்ந்த ரேணுகா, பயக்கராபேட்டை, நர்சிபட்டினம், சலூர், பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் கஞ்சா கடத்தலில் ஈடுபட்டு வருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இரகசியத் தகவலின் அடிப்படையில், பொலிஸார் ஸ்ருகாவரம் கிராமம் அருகே கும்பலை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 74 கிலோ உலர் கஞ்சா, ஒரு கார், இரண்டு இருசக்கர வாகனங்கள் மற்றும் கைப்பேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)




## கைமாறும் மத்தள!

கொழும்பு, டிசெ.29
மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தைப் பொதுத் தனியார் கூட்டுத்திட்டத்தின்கீழ் தனியார் நிறுவனங்களுக்குக் மாற்றுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் டாக்டர் அனுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார். இந்தச் செயல்முறையின் மூலம் மத்தள விமானநிலையம் எந்த வகையிலும் தனியார் மயமாக்கப்படாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இந்தத் திட்டம் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என்றும், விமான நிலையத்துக்கான ஆர்வ வெளிப்பாடுகளை அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## மீட்சி காண்கிறது சுற்றுலாத்துறை

கொழும்பு,டிசெ.29
இலங்கையின் சுற்றுலாத் துறை முழுமையான மீட்சியைக் காட்டிவருவதாகவும், 2025ஆம் ஆண்டில் வருகைதந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் பெருந்தொற்றுக்கு முந்தைய உச்சகட்ட அளவை நெருங்கியுள்ளதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

2025ஆம் ஆண்டில் இதுவரை மொத்தம் 2,298,987 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.
இது சுற்றுலாத்துறையில் பொற்காலமாகக் கருதப்படுகின்றது

ஒரு சுற்றுலாத் தலமாக இலங்கையின்மீது சர்வதேச ரீதியில் மீண்டும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதை இந்த வளர்ச்சி காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## பழைய பன்னீர்ச்செல்வமா வருவாரோ?

வடக்கு மாகாண நிர்வாகத்துக்க பெரிய பனிப்போர் நடந்துகொண்டிருக்குது. ஆர் ஆற்றை பக்கம் எண்டே தெரியாமல், அதிகாரிமார் ஒவ்வொருத்தரும் மாறி மாறி அடுத்தவைக்கு ஆப்படிச்சுக்கொண்டிருக்கினமாம். உந்த ஆப்படிப்புகளால வெறுத்துப்போன கனபேர் ஆளைவிட்டால் காணும் எண்டு வெளிமாகாணங்களுக்கு இடமாற்றம் எடுக்கிறதுக்கும் ஓடுப்பட்டுத் திரியினமெண்டும் பரவலாக் கதை அடிபடுகுது. இப்ப அதிகாரத்தில இருக்கிறவை மட்டுமில்லை, பெஞ்சன் எடுத்துப்போட்டு கௌரவப்பதவியளுக்கு வந்தவையும் 'ஏனடா இந்தப் பதவிக்கு வந்தம்?' எண்டு நினைக்கிற அளவுக்கு மேலிடத்தில இருந்து ஒரே டார்ச்சராம். முந்தி வடமாகாணத்துக்குப் பிரதம செயலாளரா இருந்த பத்திநாதன் பெஞ்சன் எடுத்துப்போட்டு, முந்தின ஆளுநர் சார்ள்ஸின்ர காலத்தில வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின்ர தலைவரா வந்தவர். அவை ரண்டு பேரும் ஒரே மதம் எண்டதாலதான் அப்பிடிப் பெஞ்சன் எடுத்திட்டுப் போனவரை இப்பிடியொரு கௌரவப் பதவியில சார்ள்ஸ் போட்டவா எண்டும் ஒரு கதை உலாவினது. இப்ப பிரச்சினை அதில்லை.

முந்தின ஆளுநர்மார் செய்ததையெல்லாம் பிறகு வாறவபிழையெண்டுபாக்கிறபோக்கு இன்னும்மாறேலை. இப்ப வடக்கின்ர நாயகமா இருந்து வேதம் ஓதுறவருக்கும் பத்திநாதனுக்கும் இடையில பனிப்போர். அது முந்தி அவை ரண்டுபேரும் நிர்வாக அதிகாரியளா இருக்கேக்க தொடங்கின சண்டை இப்ப வரைக்கும் நீளுதாம். அதால நாளும் பொழுதும் நாயகமானவர், பத்திநாதனைப் பற்றி நொட்டை நொடுக்குச் சொல்லிக் கொண்டேயிருப்பாராம். அந்தக் கடுப்பில பத்திநாதன் ரண்டொரு நாளுக்கு முதல் பிச்சை வேண்டாம் நாயைப்பிடி எண்ட கணக்கா பதவியே வேண்டாம் எண்டிட்டு வீட்டுக்குப் போட்டாராம். இது ஒரு சாம்பிள் மட்டும் தான். அதைவிட 'நிர்வாக அதிகாரிமாரை ஓயாமல் குறை சொல்லிக்கொண்டிருக்கிறதை மட்டும் தான் நாயகமா இருக்கிறவர் செய்துகொண்டிருக்கிறார். செயற்பாட்டில முட்டைதான் போட்டுக்கொண்டிருக்கிறார்' எண்டு எல்லாருமே கதைக்க வெளிக்கிட்டிருக்கினம். அந்தளவுக்கு வாய்ப்பந்தலைப் போட்டுக்கொண்டு, விழாக்களுக்கு விருந்தினராப் போய், அறிக்கையளையும் விட்டாலே தன்ரசோலி முடிஞ்சுது எண்டு இருக்கிறார்.

தானும் ஒண்டும் செய்யாமல், வேலை செய்யிற அதிகாரிமாரையும் குழப்பிக்கொண்டிருக்கிறது நாயகமானவருக்கு நியாயமாப்படுகுதோ தெரியேலை. தனக்கு நெருக்கமானவை, வேண்டப்பட்டவை எண்டு சில அதிகாரிமாரை முக்கியமான பதவியளுக்கு அவர் போட்டவர். ஆனால் இப்ப அவைகூட நாயகமானவர் ஒண்டுமே செய்யாமல் இருக்கிறார் எண்டு அவருக்கு எதிராத் திரும்பியிருக்கினம். அவையும் நாயகமானவர் சொல்லுற ஒண்டையும் மதிக்கிறேலையாம். அப்ப என்னெண்டு அவைக்குக் கீழ இருக்கிறவை மதிப்பினம்? நாயகமானவர் பதவிக்கு வரேக்க சனத்திட்ட கடும் எதிர்பார்ப்பு இருந்தது. வடக்கில பெரிய மாற்றம் ஒண்டைக் கொண்டுவருவார் எண்டுதான் எல்லாரும் நம்பினவை. அந்தளவுக்கு அவருக்கு நல்லபேர். ஆனால் உள்ளதையும் கெடுத்த நொள்ளிக்கண்ணன் மாதிரி, முந்தி அவர் சேர்த்துவைச்ச நல்லபேரையும் கெடுத்துக்கொண்டு, திசைகாட்டிக்கு தாளம் போட்டுக்கொண்டிருக்கிறார். இன்னும் ஒண்டும் கெட்டுப்போகேலை, பழைய பன்னீர்ச்செல்வமா மாறி, நாயகமானவர் முந்தின மாதிரி செயலில இறங்கி சிக்ஸர் அடிச்சால் அவருக்கும் நல்லது, சனத்துக்கும் நல்லது.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்குத் திடீர்ப்பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாகமுடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகமுடியும். நண்பர்களின் சந்திப்பும், அவர்கள்மூலம் எதிர்பாராத ஆதாயமும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். கடன் வாங்குவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. தாயின் உடல்நலனில் அக்கறை காட்டவும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்ய வேண்டிவரும். சிலருக்கு தெய்வ வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

# மூத்த கல்வியியலாளர் பஞ்சலிங்கம் மறைவு



யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்ப்பாணத்தின் மூத்த கல்வியியலாளரும், சிறந்த கல்விமானுமான அப்பாத்துரை பஞ்சலிங்கம், தனது 89 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார்.

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட இவர், 1958-1980ஆம் ஆண்டு வரை ஆசிரியராகவும், பின்னர் 1980ஆம் ஆண்டுமுதல் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகவும், 1991-1996 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றிப் பின்னர் ஓய்வுபெற்றார். இவர் தனது ஓய்வுக் காலத்தில் சிறார்களுக்கான திறன் விருத்தியை மேம்படுத்தும் நோக்குடன், உரும்பிராய் மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் கிட்ஸ் பார்க் எனும் முன்பள்ளிக் கல்வி நிறுவனங்களை நிறுவி இறக்கும் வரை சிறப்பாக நடத்திவந்துள்ளார். (க-66)

# ஒளிவிழாவும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், டிசெ.29

நுணாவில் மேற்கு அம்பாள் முன்பள்ளியின் ஒளிவிழாவும் மாணவர்கள் கௌரவிப்பும் முன்பள்ளியின் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை மதகுரு எஸ். துரைரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் மு.கோகுலராஜ், சாவகச்சேரி மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ர. ரஜீவன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-41-28)







பொன்னாலை கிராம அலுவலர் சிவரூபனுக்கான கௌரவிப்பும், நத்தார்க்கொண்டாட்டமும் மலரும் மூளாய் அபிவிருத்தி மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. குறித்த கிராம அலுவலர் இடர் காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக, மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து மாணவர்களுக்கு நத்தார்ப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (க-27)



தேசிய பாதுகாப்பு தினம் மற்றும் சுனாமி ஆழிப்பேரலையின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சுனாமி மற்றும் ஏனைய அனர்த்தங்களால் உயிர்நீத்தவர்களுக்கு பிரதேச செயலாளர் எவ்.சீ.சத்தியசோதி தலைமையில் குறித்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. (ச-41-9)





# காங்கேசன் கடற்கரையில் சுற்றுலாத்துறை நிகழ்வு!

யாழ்ப்பாணம்,டிசெ.29

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையும், வடக்கு மாகாணச் சுற்றுலாப் பணியகமும் இணைந்து நடத்திய 'அலையோடு உறவாடு....' எனும் தொனிப்பொருளிலான பண்பாடு மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். காங்கேசன்துறைக் கடற்கரையில் ஆரம்பமாகி இடம்பெற்றது. வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். இதன்போது உள்ளூர் உற்பத்தியாளர்களின் பாரம்பரிய உணவுகளின் காட்சிப்படுத்தலும் விற்பனையும், பண்பாட்டு நிகழ்வுகள், சிறுவர்களுக்கான மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள் மற்றும் இன்னிசை இசைக்கச்சேரி ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# யாருக்கான அரசாங்கம்...?

இலங்கையில் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை உள்வாங்கி – அனைத்து மக்களுக்குமான அரசியற் தீர்வை வழங்குவதற்கு இது பொன்னான வாய்ப்பு. இந்த வரலாற்று வாய்ப்பை ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் தவறவிடக்கூடாது என்றவாறாக வலியுறுத்தியுள்ளது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் இயங்கிவரும் 'சர்வதேச சிறுபான்மையினக்குழு' எனும் அமைப்பு. சுதந்திர இலங்கையின் வரலாற்றில், இதுவரை ஆட்சியில் இருந்த எந்தவொரு அரசாங்கத்துக்கும் தமிழர்களின் ஆணை கிடைத்ததேயில்லை. இந்த விடயத்தில் ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் விதிவிலக்கானது. வடக்கில் பெருமளவான மக்களும், கிழக்கில் கணிசமான மக்களும் தற்போதைய அரசாங்கத்தை ஆதரித்துள்ளனர். எனவே, அனைத்து மக்களாலும் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் என்ற வகையில், அனைவரையும் பிரதிநிதித்துவம் செய்து செயற்படவேண்டிய கட்டாயத்தனம் அரசுக்கு இருக்கவே செய்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் காத்திரமான கருத்தை –வலியுறுத்தலை, தக்க தருணத்தில் முன்வைத்திருக்கின்றது 'சர்வதேச சிறுபான்மையினக்குழு'.

சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை வென்றுவிட்டோம், சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெற்றே ஆட்சிக்கு வந்தோம் என்றும் தம்பட்டம் செய்யாத ஆளுந்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் இல்லை. அந்தளவுக்கு, சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட விடயத்தை பெரியதொரு வெற்றியாக திசைகாட்டி அரசாங்கமும் எண்ணுகின்றது. ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இதுவரையான நடவடிக்கைகளில் எவையும் சிறுபான்மை மக்களின் நலன்களைப் பிரத்தியேகமான முறையில் முன்னிலைப்படுத்தியதாக இல்லை. ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டங்கள், ஆயுதக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகள், போதைப்பொருள் முறியடிப்பு, அபிவிருத்திகள் என நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்ட நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவே தவிர, சிறுபான்மையினரின் கடந்தகாலத் துயரங்களுக்கு மருந்திடும் செயற்பாடுகளும், அவர்களின் நீண்டகாலக்கோரிக்கைகளும்கவனத்தில்எடுக்கப்படவில்லை என்பதே நிதர்சனம்.


அரசியற்கைதிகளின் பிரச்சினையை காதுகளால் அல்லாமல் இதயத்தால் கேட்கின்றோம் என்றார்கள் திசைகாட்டியினர், ஆனால் இன்னமும் எம்மவர்கள் சிறைகளுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கின்றனர். காணமற்போனோரின் துன்பத்தைப் பட்டுணர்ந்தவர்கள் என்றார்கள், இன்னமும் எமது தாய்மாரும் சகோதரிகளும் பதாகைகளுடன் வீதியில் தான் நிற்கின்றனர். மக்களின் காணிகள் மக்களுக்கே என்றார்கள், ஆனால், 'தையிட்டி திஸ்ஸ விகாரை பொது மக்களின் காணிகளைத் திட்டமிட்டு ஆக்கிரமித்தே அமைக்கப்பட்டுள்ளது. எனினும், விகாரையை அகற்றமுடியாது' என்று திட்டவட்டம் காட்டியுள்ளனர். இவ்வாறாக, சொல்வதொன்றும் செய்வதொன்றுமாகவே இந்த அரசாங்கம் நகர்கின்றது. ஊழல், போதைப்பொருள், அபிவிருத்தி என பெரும்பான்மையின மக்களின் 'தேசியப் பிரச்சினைகளை' கருத்திற்கொண்டு எடுக்கப்படும் முடிவுகளால் ஏற்படும் நன்மைகளைத்தான் நாமும் அனுபவிக்கமுடியுமே தவிர, எமக்கான தீர்மானங்களும் தீர்வுகளும் சாத்தியமற்றவையே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

சூரியனாகப் பிரகாசிக்க சந்தர்ப்பம் இருக்கும்போது ஏன் மெழுகுவர்த்தியைப் போல் வெளிச்சம் தர வேண்டும்?

– நெப்போலியன் ஹில்



# கடந்தாண்டை விஞ்சியது நாட்டின் வரி வருமானம்!

**கொழும்பு, டிசெ.29**
**2025ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வரி வருமானம் 4,613 பில்லியன் ரூபா கிடைத்துள்ளது என நிதி அமைச்சு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கை சுங்கத்தின் ஊடாக 2,223 பில்லியன் ரூபா வருமானமும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஊடாக 2,105 பில்லியன் ரூபாவும், மதுவரித் திணைக்களத்தின் ஊடாக 213 பில்லியன் ரூபாவும், ஏனையவை ஊடாக 70 பில்லியன் ரூபாவும் வருமானமாகப் பெறப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் வாகன இறக்குமதிமூலம் ஈட்டப்பட்ட வரி வருமானம் 410.5 பில்லியன் ரூபா வரை உயர்ந்துள்ளது. இது கடந்த 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 355 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. 2024ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் வாகன இறக்குமதியின் ஊடாக 54.6 பில்லியன் ரூபா வருமானமாக பெறப்பட்டிருந்தது. இதேவேளை 2025ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் மொத்த அரச வருமானம் 35.5% இனால் அதிகரித்து 4,945.8 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது. 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தத் தொகை 3,650.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# மோ.சைக்கிள் விபத்தில் மாணவன் பலி

குருநாகல், டிசெ.29
குருநாகல் - லுணுவில பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அதிக வேகத்துடன் பயணித்த மோட்டார் சைக்கிள், செலுத்துநரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த தொலைபேசிக் கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 18 வயதுடைய பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## சிங்கள இசைக்குயில் லதா காலமானார்

கொழும்பு, டிசெ.29
சிங்களத் திரையிசையின் 'குயில்' என அறியப்படும் லதா வல்பொல தமது 91 ஆவது வயதில் காலமானார். 1934 ஆம் ஆண்டு கல்கிசையில் பிறந்த லதா வல்பொல, 1946ஆம் ஆண்டு தனது 12 ஆவது வயதில் அன்றைய 'ரேடியோ சிலோன்' வானொலியில் தமது முதற்பாடலைப் பாடினார். அவர் இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றில் வெளிநாட்டு மொழிப்பாடல்களும் அடங்குகின்றன. இவர், கடந்த பல தசாப்தங்களாக 600க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்குத் தமது குரலால் பங்களிப்புச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## துப்பாக்கி வெடித்து ஒருவர் உயிரிழப்பு

மதவாச்சி - உடும்புகலவத்த பகுதியில் துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவருக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் துப்பாக்கி வெடித்ததில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)



# 24 மணித்தியாலத்தில் 840 பேர் கைது

நாடு முழுவதும் போதைப்பொருளைத் தடுக்கும் 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய வேலைத்திட்டத்தின்கீழ், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளுக்கமைய 840 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவர்களிடமிருந்து 378 கிராம் ஹெரோய்ன், 417 கிராம் ஐஸ், 554 கிராம் கஞ்சா, 402,022 கஞ்சா செடிகள், 9 கிராம் குஷ்ரக போதைப்பொருள், 12 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 996 போதை மாத்திரைகள், 30 கிராம் 100 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 130 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

நாளை
செவ்வாய்க்கிழமை - மார்கழி 15
30.12.2025
சுபநேரம் : 10.59 - 12.29
ராகுகாலம் : 03.29 - 04.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம்பெயர் உறவுகளால் கர்ப்பிணிகளுக்கு உதவி

திருமலை,டிசெ.29
மூதூர் பள்ளிக்குடியிருப்புக் கிராமத்தில், டித்வா புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் 19 பேருக்கு, சத்துணவுப்பொருள்கள் அடங்கிய நிவாரணப்பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில், புலம்பெயர் வாழ் ஈழத்தமிழ் உறவுகளின் நிதிப்பங்களிப் புடன் இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன. கனடாவைச் சேர்ந்த கு.திருமுருகன் மற்றும் அவுஸ்திரேலியா வாழ் உறவான விஜித்தா ஆகியோரது நிதிப்பங்களிப்பில் தலா 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கப்பட்டன.

(க-100)

# தேசியமட்ட ஓட்டப் போட்டியில் பதக்கங்களைக் குவித்த டனுசன்



வவுனியா,டிசெ.29
35 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஓட்டப்போட்டியில் வவுனியா வீரர் சசிகுமார் டனுசன் தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களைத் தனதாக்கியுள்ளார்.

தியகம மஹிந்த ராஜபக்ச சர்வதேச விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 1500 மீற்றர் ஓட்டப்போட்டியில் நான்கு நிமிடம் 2.63 செக்கனில் ஓடி முடித்து தங்கப்பதக்கத்தையும் 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஒரு நிமிடம் 56.90 செக்கனில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும் பெற்று வவுனியா மாவட்டத்துக்கு சசிகுமார் டனுசன் பெருமை சேர்த்துள்ளார்.

இதேவேளை இவ்வருட வட மாகாணமட்ட விளையாட்டுப் பெருவிழாவில் 1500 மீற்றர், 800 மீற்றர் ஆகிய ஓட்டப் போட்டிகளில் பழைய சாதனையை முறியடித்து புதிய சாதனையையும் டனுசன் தம்வசப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-110)

## மணமகள் தேவை

1. அளவெட்டி இந்து. கௌரவகுலம் (V), 1993. விசாகம். Bsc Engineering, Austraila Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
2. மாதகல் - தெல்லிப்பளை. இந்து. கௌரவகுலம் (K), 1991. பரணி. Engineering (Longdon University) UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (53670)
3. உடுவில். இந்து. கௌரவகுலம் (K). 1993. பூரம். B.Eng (hons) in Civil and Structural, Project Engineer, Singapore, மணமகனுக்கு மணமகள் தேவை. (52945)
4. தகப்பனார் உடுப்பிட்டி குருகுலம். தயார் பருத்தித்துறை கௌரவகுலம் (V). திருவோணம். 1990. இந்து. HNSA, Manager, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (52734)
5. சுன்னாகம். இந்து. கௌரவகுலம் (K), 1996 மிருகஷீடம். Bsc Engineering, Australia, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (32933)
6. Jaffna Town, குருகுலம், 1994. திருவோணம். MSc (Canada) Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (54640)
7. ஆனைக்கோட்டை - முல்லைத்தீவு. Roman Cathlic, 1995, LLB/LLM/LPC, Netherlands + UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (50197)
8. தெல்லிப்பலை - பருத்தித்துறை. இந்து. குருகுலம். 1996. சித்திரை. masters, Principal Advisor for Newzealand goverment, New zealand Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (36133)
9. நீர்வேலி. புங்குடுதீவு. விஸ்வகுலம். இந்து திருவாதிரை. 1993. Bsc Engineering, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (36133)

நீங்களாகவே www.thaalee.com என்கிற Website இல் உங்களுக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்து கொள்ளலாம்.
எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce என்பன உண்டு

S.Sharma J.P 077 803 8193
www.thaalee.com 077 539 3728

## வேலைவாய்ப்பு

K.K.S வீதி, யாழ்மாநகரசபை
எல்லைக்குள் இருக்கும் எமது கடைக்கு வேலைக்கு
ஆள் தேவை (பெண்கள்/ஆண்கள்)
சம்பளம் 25000 தொடக்கம்35000 வரை
வழங்கப்படும்
தொடர்புகளுக்கு:-
077 989 8190,075 475 7056
(CS 30997) R

## சீட்டிழுப்பு திகதி மாற்றம்

எமது பிரதேச செயலக ஊழியர்
நலன்புரிச்சங்கத்தினால்
01.01.2026 அன்று நடாத்தப்படவிருந்த
சீட்டிழுப்பு,அண்மைய அனர்த்தநிலை
காரணமாக 02.02.2026 திங்கட்கிழமை
பி.ப 3.00 மணிக்கு நடைபெறும்
என்பதனை தயவுடன் அறியத்தருகின்றோம்,
சிரமத்திற்கு வருந்துகிறோம்.

தலைவர்/செயலாளர்
ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம்
காரைநகர்.
(CS/30993) R

Best Wishes

# மணி விழா வாழ்த்தும் பிறந்த தின வாழ்த்தும்



## கந்தசாமி தனஞ்செயன்

**SLTS - I**

(பட்டதாரி வர்த்தக ஆசிரியர்)

உயர்தர தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA),
பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE)
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை சுன்னாகம்

தனது 24 வருட கல்வி சேவையிலிருந்து இன்று ஓய்வு பெறுவதோடு தனது 60 வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் எமது யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆசிரியர் க.தனஞ்செயன் அவர்கள் ஸ்கந்தப்பெருமானின் துணையுடன் நலமாகவும் சுபீட்சமாகவும் வாழ மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.


**சேவைக்காலம்**

- 12.08.2002 - 31.12.2007
  புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
- 01.01.2008 - 31.12.2015
  யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்
- 01.01.2016 - 28.12.2025
  யா/ஸ்கந்தவரோயக் கல்லூரி

வாழ்த்துவோர்:
கல்விசார், கல்விசாரா ஊழியர் நலன்புரிக்கழகம்
யா/ஸ்கந்தோரயக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவுதின அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 22 • 06 • 1944

மறைவு 02 • 12 • 2025

கடந்த 02.12.2025 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் மயில்வாகனம் பாலசுந்தரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 30.12.2025 செவ்வாய்க்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 01.01.2026 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்று தொடர்ந்து 03.01.2026 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் "திவ்ய மஹால்" மண்டபத்தில் (1001, வண்ணார் பண்ணை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பிரிவுத்துயர் கேட்டு தொலைபேசி மூலமாக, சமூகவலைத்தளங்களூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி உரைகள், பிரசுரங்கள், பதாதைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தேவையறிந்து செயற்பட்ட அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல 66/14, 6ஆம் ஒழுங்கை,**
**கருவப்புலம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 • 10 • 1939

மறைவு 26 • 12 • 2025

### இராசம்மா திருநாவுக்கரசு (சின்னம்மா)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சிவபூமி முதியோர் இல்லம் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா திருநாவுக்கரசு அவர்கள் 26.12.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருநாதர் - செல்லம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற க.திருநாவுக்கரசு (முன்னைநாள் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிறிராமன் மற்றும் ரிஸ்யா, டக்சியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரபாகரன், கஜந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகலிங்கம், தமோதரம்பிள்ளை, தங்கரத்தினம் ,நாகலச்சுமி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், அபினயா, அபிஷான், கஜானி, ஆதேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2025) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் ஈசன் அந்தியகால சேவையில் (A9 பிரதானவீதி, யாழ்ப்பாணம்) நடைபெற்று தகன கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60308) E

**தொடர்புகளுக்கு:**
**077 268 3596**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 • 04 • 1966

மறைவு 27 • 12 • 2025

### சுப்பிரமணியம் கிருஸ்ணமூர்த்தி

இராமநாதபுரம், வட்டக்கச்சியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வீரகாளியம்மன் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கிருஸ்ணமூர்த்தி அவர்கள் கடந்த 27.12.2025 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2025) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.46/2, அம்மன் கோவில் வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CR 44707) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 • 12 • 1948

மறைவு 26 • 12 • 2025

### கதிரேசு சிதம்பரநடராசா

**(முன்னாள் ஈஸ்வரா லொட்ச் உரிமையாளர்)**

நயினாதீவு 7ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு சிதம்பரநடராசா அவர்கள் கடந்த 26.12.2025 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சரவணமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், சுகிர்தா (கனடா), சுபாசினி (பிரான்ஸ்), ஜெயகவிதா (லண்டன்), சிந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரன் (கனடா), ஜெயக்குமார் (பிரான்ஸ்), சிவரஞ்சன் (லண்டன்), அருண்குமார் (ஆசிரியர் ஆவரங்கால் நடராச ராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சரோஜினிதேவி, சாம்பசிவம், சிவபூரணி, லிங்காதேவி, இராஜயோகபூபதி மற்றும் வருணநாதன் (Rtd. SPHI), நவபுஸ்பராணி (ஹொலண்ட்), முருகபத்மராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி கந்தையா மற்றும் சரோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான இராசையா, ஞானசுந்தரம் மற்றும் மகாலட்சுமி, வரதாம்பிகை, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சந்திரவதனி, காலஞ்சென்ற நாகலட்சுமி மற்றும் சிறிஸ்கந்தராசா (சுமங்கலி லொட்ச்), சந்திரசேகரம், சாந்தினி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் சதாருபி, ஜெயராணி, காலஞ்சென்ற பிரபாகரன் ஆகியோரின் அன்புச் சகலரும், அபிஷனா, ரிஷான், பிரஷான், அக்ஷனா, அபினாஷ், அமிர்தனா, சஜித், ஆருஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 7.00 மணியளவில் அவரது கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


(CS 60309) E

**தொடர்புகளுக்கு:**
**071 566 4773**

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் பணிபுரியும்

## மகாலிங்கம் நிரோஜன்

அவர்கள் (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 02.01.1995 மறைவு 28.12.2025

**உரிமையாளரும் ஊழியர்களும்**
**த.குமாரசாமி அன் சன்ஸ்**

(CS 60307) E

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## தர்மலிங்கம் கண்ணம்மா

அணையா விளக்காய் ஒளி வீசி அன்பு வழியிலெமை வளர்த்தெடுத்து இதமாய் பண்பாய் உறவுபேணி நிதமும் பொறுமையாய் பணிபுரிந்து பாரிலெம்மை உயர்வாய் வாழவைத்து பாசமலர் அன்னையின் பாதம் பணிந்து அம்மா...!!! அம்மா...!!!

அன்பும் பண்பும் பாசம் வீரம் தைரியம் வள்ளல் கொடைவள்ளல் இரக்கம் உதவி அனைத்துக்கும் சொந்த காரியமான எங்கள் இருப்பு பெண்மணி எங்கள் அழகி அம்மா எங்களை விட்டு எங்கு சென்றீர்கள். ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகொண்டு வேரென காத்து நின்றாயோ சிறிது காலம் உன்னுடன் வாழவென்று ஆவலுடன் ஓடிவர சற்றும் எதிர்பாரமல் மாயப்புயல் வடிவில் காலனவன் உயிர் பறிக்க எமக்கு சோகத்தை தந்து விட்டு சென்றாயே அம்மா.

உன் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் துடிக்கின்றோம் இங்கே எப்போது காண்போம் அம்மா உன்னை அடிமுடி தேடினாலும் அகராதியை புரட்டினாலும் முழுமையான அர்த்தம் அறிய உயிர்சித்திரம் அம்மா

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இறுதி கிரியைகளில் கலந்து கொண்டு மலர்மாலை அணிவித்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 17.07.1940 மறைவு 29.11.2025

**கைதடி கிழக்கு**
**கைதடி**

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**
**புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம்**

(CS 60302) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைபேசி கடத்தியோர் கைது


கொழும்பு, டிசெ.29 சுமார் ஒன்றறைக் கோடி ரூபாய் பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் வெளிநாட்டு சிகரெட்டுகளை நாட்டுக்குள் சட்டவிரோதமாகக் கொண்டு வர முயன்ற இருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

கைதாகிய இருவரும் இந்தியப் பிரஜைகள் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவர்கள் இருவரும் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 01 . 1936



மறைவு 28 . 12 . 2025

### திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம்

(ஓய்வுநிலை அதிபர்-யாழ் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி)

கொக்குவிலை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்கள் நேற்று (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை-இரத்தினம்மா தம்தியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுரு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், நிரஞ்சன் (கனடா), நிருபா (ஆசிரியர்-அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரஷாந்தி (கனடா), அருந்தவம் (ஆசிரிய ஆலோசகர்-வலிகாம கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நவநீத், பிரஜித், மதுரா, ரூபிகா ஆகியோரின் அன்புப் பேரனும், சுந்தரலிங்கம் காலஞ் சென்ற சோதிலிங்கம் மற்றும் செல்வநாயகி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறியத் தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்
அருந்தவம்
077 796 7516

(CS 309941) R

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 10 . 1944



மறைவு 28 . 12 . 2025

### விசுவலிங்கம் பாலசிங்கம்

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் பாலசிங்கம் அவர்கள் நேற்று (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், சின்னையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், கனகபூசனியின் அன்புக் கணவரும், சுதர்சன் (பால் பண்ணை இணுவில்), சுபாஸ்கரன் (விற்பனை முகாமையாளர் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்), சுபாசினி (ஆசிரியர் - நடேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், முகுந்தினி, தயந்தினி (மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - வடமாகாணம்), பாலகுமார் (அதிபர் - அன்ரனிஸ் றோ.க வித்தியாலயம் கிளிநொச்சி) ஆகியோரின் மாமனாரும், பிரியங்கன், திரிகஜன், யதார்த்திகன், ஹரிசான், வர்ஜன், திவ்ஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பத்மாவதி, பாலரத்தினம், காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாற்பண்ணை வீதி
இணுவில் தெற்கு
இணுவில்

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 03 . 1943



மறைவு 27 . 12 . 2025

### தாமோதரம்பிள்ளை பாலசிங்கம்

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னைநாள் கம்பளை பிரபல வர்த்தகருமாகிய தாமோதரம்பிள்ளை பாலசிங்கம் கடந்த 27.12.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், தில்லையம்பலம்-பூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், வையந்திமாலா அவர்களின் பாசமிகு கணவரும், அருட்செல்வம் (கனடா), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலதாசன் (பிரான்ஸ்), கிருஸ்ணதாசன் (பிரான்ஸ்), சிவதாசன், ஸ்ரீதாயாளினி, கேசவதாசன் (பிரான்ஸ்), கஜேந்தினி (லண்டன்), புஸ்பதாசன் (பிரான்ஸ்), ஜெசிதா, யாதவதாசன், றமணதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோரஞ்சிதம் (பிரான்ஸ்), உமா (பிரான்ஸ்), அருள்ராசா, கோபிகா (பிரான்ஸ்), ஐங்கரன் (லண்டன்), லாவணியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அகர்சனன், அட்சயன், அட்சயா, அத்விக், அஜிசன், அபிநயா, அபிநயன், அனந்திதா, அஸ்வினி, அபினிசா, சன்விகா, அகழறிவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2025) செவ்வாய்க் கிழமை காலை 5.00 மணியளவில் அவரது வவுனியா இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மகன்-பாலன்(பிரான்ஸ்) 0033-695587936
மகன்-குகன்(பிரான்ஸ்) 0033-695438910
மகன்-கேசவன் (பிரான்ஸ்) 0033-616329319
மகள்-ராதிகா (லண்டன்) 0044-7465499947
மகன்-றமணன் 0779345716

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25.08.1952
மறைவு 09.01.2025





தோற்றம் 12.05.1956
மறைவு 24.08.2024

அமரர் கந்தையா இரவீந்திரன்
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

அமரர்
இரவீந்திரன் வனஜா

திதி:
தசமி

திதி:
பஞ்சமி

காலம் கணக்கிட்டது ஒரு வருடம்
கண்ணீர் கணக்கிட மறுக்கிறது இன்னும்…
நிழலாய் தொடரும் உங்கள் பாசம்
நினைவாய் நின்று உயிர் கொடுக்கிறது எங்களுக்குள்.
வார்த்தையில்லா அன்பின் வடிவமாய்
வாழ்க்கை பாடம் சொல்லித் தந்தவர்கள் நீங்கள்,
உடலால் விலகினாலும்
உயிராய் இணைந்தே இருக்கிறீர்கள் எங்களோடு.
தாயின் மடியில் தொடங்கிய உலகம்
தந்தையின் தோளில் தாங்கி வளர்ந்த கனவுகள்,
இன்றும் வழிகாட்டும் விளக்காக
எங்கள் பாதையை ஒளிரச் செய்கின்றன.
ஒரு வருடம்…
மௌனம் பேசக் கற்றுக்கொண்ட காலம்,
விடைபெறாமலே சென்ற உங்கள் நினைவுகள்
வாழ்க்கை முழுவதும் எங்களோடு பயணிக்கும்.
பூக்களால் அல்ல,
பாசத்தால் மலர்ந்த நினைவுகளை
இதயத்தில் சுமந்தபடி
மௌன அஞ்சலியாய் வணங்குகிறோம்…

இணுவில் மேற்கு, இணுவில்.


என்றும் நினைவுகளில்
குடும்பத்தினர்.

(CS 287511)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பளுதூக்கும் போட்டிகளில் சாதனை படைத்த சாவகச்சேரி கச்சாய் வீதி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக வீரர் ச.புசாந்தன் சாவகச்சேரி சனசமூக நிலைய நிர்வாகிகளால் கடந்த திங்கட்கிழமை மதிப்பளிக்கப்பட்டார். இவர் 13 சர்வதேச பதக்கங்களையும், 4 இலங்கையின் தேசிய சாதனைகளையும் பெற்றுக்கொண்டுள்ளார். நிகழ்வில் சாவகச்சேரி நகரபிதா வ.ஸ்ரீபிரகாஷ் கலந்துகொண்டார். (ச-41-9)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக கிராம அலுவலர்களுக்கு 2026ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வு சம்பந்தமான தெளிவூட்டும் கருத்தரங்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சிவராசா கலந்துகொண்டார். (ச-41-9)



அனலைதீவு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் திருவெம்பாவை உற்சவம் கடந்த வியாழக்கிழமை காலை ஆரம்பமானது. (ச-41- 9)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாகாணமட்ட நாடகப் போட்டியில் மன்னார் கட்டை அடம்பன் மத்திய மகாவித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளது. (ச-41-9)





மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு உளசமூக உளவளத்துணை விழிப்புணர்வு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. சிறுவர் மற்றும் மகளிர் அமைச்சின் நிதியனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலகின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதன்போது கட்டிளமைப்பருவத்தில் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கருத்துகள் வழங்கப்பட்டன. (ச-41-9)



சாவகச்சேரி ஆதார மருத்துவமனை உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் கிறிஸ்து பிறப்பு நிகழ்வு மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ச-41-9)



சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால், டித்வா புயலால் பாதிக்கப்பட்ட 45 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. சங்கத் தலைவர் தலைமையில் இந்த நிகழ்வு சாவகச்சேரி டச்சு வீதி ஐங்கரன் மணிமண்டபத்தில் இடம்பெற்றது. (ச-41-9)



இணுவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற 3 மாதங்கள் யோகக்கலைப் பயிற்சி வகுப்பின் நிறைவில் வளவாளர்களுக்கு மதிப்பளிப்பும், பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கலும் அண்மையில் இடம்பெற்றன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை ஓட்டத்தில் நிதி திரட்டல்; களத்தில் ஹொங்கொங் வீரர்!

யாழ்ப்பாணம்,டிசெ.29

சிட்னியைத் தளமாகக்கொண்டு இயங்கும், சிறுவர் புற்று நோய் நிறுவனம் என்ற அமைப் புக்கு நிதி திரட்டும் சாதனை ஓட்டம் பருத்தித்துறை சக்கோட்டை முனையில் இருந்து அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஹொங்கொங் 19 வயதுக்குட்பட் டோர் கிரிக்கெட் அணியின் முன் னாள் வீரரும், மெல்போர்னில் உடற் பயிற்சி உடலியல் நிபுணராகப் பணியாற்றிவருபவரு மான ராகுல் சர்மா இந்தச் சாதனை ஓட்டத்தில் ஈடுபட்டுள்ளார். பருத்தித் துறை சக்கோட்டை முனையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள சாதனை ஓட்டத்தை ஒரு வாரத்துக் குள் முடிக்கத் திட்டமிட்டுள்ளார். நாளை செவ்வாய்க்கிழமை இலங் கையின் தென்முனையான தெய் வேந்திர முனையைச் சென்றடை யத் திட்டமிட்டுள்ளார். இவர் இந்த ஓட்டத்தைத்திட்டமிட்டவாறு நிறைவு செய்தால் ஹொங்கொங்கைச்



சார்ந்த அறக்கட்டளை 10 ஆயிரம் ஹொங்கொங் டொலரை (1,286 அமெரிக்க டொலர்) நன்கொடை யாக வழங்க முன்வந்துள்ளது. இந்தியாவைச் சேர்ந்த ராகுல் சர்மா ஹொங்கொங்கில் வளர்ந்த துடன், 10 வயதில் கிரிக்கெட் விளையாடத் தொடங்கியிருந்தார். 2018 மற்றும் 2019 ஆம் ஆண் டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஹொங்கொங் 19 வயதுக்குட் பட்டோர் கிரிக்கெட் அணிக்காக விளையாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-100)

## அவசரகால...

கிழமை இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை விடுத்துள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், நாட்டின் இயல்பு நிலை, அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகள் தடையின்றி வழங்கப்படு வதை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த அவசரகால நிலைமையைத் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## டக்ளஸின்...

2001ஆம் ஆண்டு டக்ளஸ் தேவா னந்தாவுக்கு தனிப்பட்ட பாவனைக் காக இராணுவத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கி ஒன்று 2019ஆம் ஆண்டு பாதாள உலகக் குழுத் தலைவரான மாகந்துர மதூஷிடம் இருந்து மீட்கப் பட்டிருந்தது. இது தொடர்பாக விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அந்தத் துப்பாக்கி எவ்வாறு மாகந்துர மதூஷிடம் சென்றது என்பது தொடர் பில் தெளிவுபடுத்தத் தவறியதால் டக்ளஸ் தேவானந்தா கடந்த வெள் ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

அன்றைய தினமே அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, 72 மணிநேர தடுப் புக்காவல் உத்தரவை பெறப்பட்டிருந் தது. இந்தநிலையில், நேற்று அவர் மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது, எதிர்வரும் 9ஆம் திகதிவரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.

மாகந்துர மதூஷிடம் மீட்கப்பட்ட துப் பாக்கிக்கு மேலதிகமாக டக்ளஸ் தேவானந்தாவுக்கு இராணுவத்தால் 19 துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருந் தன. அந்தத் துப்பாக்கிகள் மீள ஒப்ப டைக்கப்பட்டனவா? அல்லது இன் னும் டக்ளஸ் வசம் தான் உள்ள னவா? இல்லையேல் அவையும் பாதாளக் கும்பல்களுக்கு வழங்கப்பட் டனவா? என்ற கோணங்களில் குற் றப்புல னாய்வுத் திணைக்களம் விசா ரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-எ-26)

## சமஷ்டிக்...

துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:-

இந்திய வெளியுறவுத் துறை அமைச் சர் ஜெய்சங்கருடனான சந்திப்பில் அமைச்சரிடம் மனுவெதுவும் கைய ளிக்கப்படவில்லை எனவும் தூதுவரி டமே மனுவொன்று கையளிக்கப்பட் டது என்றும் கஜேந்திரகுமார் தெரிவித் திருந்தார். இவ்வாறான சந்திப்புக்க ளில் அமைச்சர் மனுவைக் கையேற் பதில்லைஎன்ற இந்தியத்தூதரகத்தின் அறிவித்தலுக்கமைய இந்தியத் தூது வர் சந்தோஷ் ஜாவிடம் மனு கைய ளிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின் அடிப்படை நோக் கம், மாகாணசபைத் தேர்தலை நடத்த இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண் டும் என்பதாகும். மாகாணசபைத் தேர்தலை நடத்த நானும் ஏனையவர் களும் வலியுறுத்தினோம். சமஷ் டியை பற்றி நாங்கள் பேசவில்லை என்று கஜேந்திரகுமார் பொன்னம்ப லம் தெரிவித்து ஆச்சரியமளிக்கிறது. கலந்துரையாடலை ஆரம்பித்தது நானே. கலந்துரையாடலின் இறுதியில் சமஷ்டி தொடர்பாகப் பேசினோம். பல விடயங்களைப் பேசினோம். சந்திப்பு முடிவுறும் தருணத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு நாம் முன்வைத்த கடிதத்தின் நோக்கத்தை மீண்டும் ஜெய்சங்கருக்கு தெளிவுப டுத்தினோம். அதேபோன்று இந்தச் சந்திப்பில் எமது இறுதி இலக்கும் நோக்கும் கூட்டாட்சி சமஷ்டிதான் என் பதை தெரிவித்தோம். நாம் கொடுத்த மனுவிலும் இந்த விடயம் இருக்கிறது. 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் முடக்கும் என்று கூறும் கஜேந்திர குமார் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறுகின்றார். இது சுய முரண்பாடு. மாகாணசபை முறைமை தீர்வு என்றோ முழுமை யாக ஏற்கிறோம் என்றோ தமிழரசுக் கட்சி எப்போதும் கூறியதில்லை. உண்மைக்கு புறம்பான முறையில் பேசுவது அரசியல் ஜனநாயகத்துக்கு முரண் - என்றார். (அ-எ-26)

## கலாசார...

சுற்றிவளைக்கப்பட்டுச் சோதனையி டப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன் றில் முற்படுத்துவதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-27)

## மீனவர்களை...

கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய் யப்படுவதைத் தடுக்கவும், கைது செய் யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர் களின் மீன்பிடிப் படகுகளையும் உட னடியாக விடுவிக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் தனது கடித்த தில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கை அதி காரிகளால் சிறைபிடிக்கப்படுவது தடையின்றித் தொடர்கின்றது என்று குறிப்பிட்டுள்ள தமிழக முதலமைச்சர், இந்தக் கைது நடவடிக்கைகள் நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கடு மையான பாதிப்பை ஏற்படுத்தியுள் ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நெடுந்தீவுக் கடற்பரப் பில் எல்லைதாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர் கள் மூவரும் ஊர்காவற்றுறை நீதி மன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தமிழக மீனவர்களின் எல்லைதாண் டிய மீன்பிடி நடவடிக்கைகளால் வடக்கு மீனவர்களின் மீன்பிடி உபகர ணங்கள் சேதமாக்கப்பட்டு அவர்க ளின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவது டன், வடக்குக் கடலின் மீன்வளம் பெரும் பாதிப்புகளை எதிர்கொண் டுள்ளது. அதனால் தமிழக மீனவர்க ளின் எல்லைதாண்டிய மீன்பிடியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைத்து வருகின்ற னர். (அ-எ-இ)

## 62 பல்...

உட்பட தொலைதூரப் பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற் றும் சுகாதார நிறுவனங்களில் பணி யமர்த்த சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சகம் நடவடிக்கை எடுத் துள்ளது.

இந்த பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் இலங்கை மற்றும் வெளிநாட்டு பல்க லைக்கழகங்களில் உள்ள மருத்துவ பீடங்களில் ஐந்து ஆண்டுகள் இளங் கலைக் கல்வியைப் பெற்றவர்கள். அதன் பிறகு அரசு மருத்துவமனைக ளில் விசேட மருத்துவர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ் ஒரு வருட பயிற்சியைப் பெற்றுள்ளனர். இந்த நியமனங்கள் ஜனவரி முதலாம் திகதி யிலிருந்து நடைமுறைக்கு வரவுள் ளன. (அ-ச-இ)

## வலிப்பு...

இவருக்கு வலிப்பு ஏற்பட்டதை அடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார். எனினும் அவர் உயிரிழந் துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## தங்கநகை...

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், நவாலியைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரைக் கைது செய்த னர். சந்தேகநபர் சாவகச்சேரி நீத வான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் தடுப்புக் காவலில் வைக் கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-28)

## 2026...

நாள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொது விடுமுறை நாள்களில் ஏற்ப டும் மாற்றங்கள் வர்த்தமானி அறி விப்பு மூலம் அறிவிக்கப்படும் என்று அரச அச்சுத்துறை தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## தமிழக...

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டி ருந்த கடற்படையினர், தமிழக மீன வர்கள் மூவரையும் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய் துள்ளனர். அவர்களது படகும் கடற்ப டையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் கடற் றொழில் நீரியல்வளத்துறை அதிகா ரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதி மன்றில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவம்ச மனோநிலையிலேயே திசைகாட்டி அரசும் பயணிக்கிறது!

## சிவில் அமைப்புகள் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், டிசெ.29**

**கடந்த காலங்களிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ளாத சிங்களப் பேரினவாதமும் அதன் செயற்பாட்டுப் பொறிமுறையான அரசுக் கட்டமைப்பும் மீண்டும் மகாவம்ச மனோநிலையில் பயணிக்க முடிவெடுத்திருப்பது இந்த நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் எந்த வகையிலும் ஏற்படுத்தாது இவ்வாறு தமிழ் சிவில் அமைப்புகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.**

தையிட்டி திஸ்ஸ விகாரையில் சாத்வீக வழியில் போராடியோரைக் கைது செய்தமையைக் கண்டித்து சமூக விஞ்ஞான ஆய்வு மையம், குரலற்றவர்களின் குரல் அமைப்பு, கிராமிய உழைப்பாளர் சங்கம்,மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், வடமாகாண காணிகள் உரிமைக்கான மக்கள் அமைப்பு, தமிழர் கலைப் பண்பாட்டுக் கழகம்,தமிழ் சிவில் சமூக அமையம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகிய சிவில் அமைப்புகள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் உள்ள முக்கியமான விடயங்கள் வருமாறு

இம்மாதம் 21ஆம் திகதி தையிட்டி சட்டவிரோத, ஜனநாயக விரோத பௌத்த விகாரைக்கு எதிராகவும், தமது நில உரிமையை நிலைநாட்டக் கோரியும் நடந்த அறவழிப் போராட்டத்தை வன்முறை கொண்டு அடக்கிய சிறிலங்கா அரசினதும், தற்போதைய அரசாங்கத்தினதும், அதன் கருவிகளான பொலிஸாரினதும் கருத்தியலையும் செயற்பாடுகளையும் நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த அறவழிச் செயற்பாட்டில் ஈடுபட்ட ஆன்மிகத் தலைவரும் துறவியுமான தவத்திரு வேலன் சுவாமிகள், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் உள்ளிட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என அனைவரின் மீதும் பிரயோகிக்கப்பட்ட வன்முறையையும், அவர்களின் கைதையும் சாதாரணமாகக் கடந்து செல்லமுடியாது. இவற்றைச் சிறிலங்காவின் அமைதிக்கு நிரந்தரப் பங்கம் விளைவிக்கும் சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதற்காக அரசால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே நாம் கருதுகிறோம்.

இந்த விவகாரத்தைக் கட்சி அரசியற் பிரச்சினையாகவும், அநீதிகளுக்கு எதிரான மக்களின் செயற்பாடுகளை சட்டவிரோதச் செயற்பாடுகளாகவும் குறுக்கி, அதன் மூல காரணமாக இருக்கும் சிங்களப் பெருந்தேசியமயமாக்கப்பட்டுள்ள அரசுக் கட்டமைப்பை அப்படியே ஏற்றுக்கொண்டு, தனது கைகளில் எடுத்திருக்கும் தற்போதைய அரசாங்கமும் அதன் அரசுத் தலைவரும், தாமும் மகாவம்ச மனநிலையின் அரசியல் வாரிசுகளே என்பதைத் தெளிவாக நிரூபித்துள்ளார்கள்.

இந்த நிலையில் ஒற்றை மத மேலாதிக்கத்தையும், ஒரு தேசிய இனத்தின் மேலாண்மையையும் உறுதிப்படுத்தும் ஒற்றையாட்சி (ஏக்கிய இராச்சிய) பல தேசிய இனங்களின் தாயகமாக உள்ள ஒரு நாட்டிற்குப் பொருத்தமானது அல்ல என்பதை மீள வலியுறுத்தி, மற்றைய தேசிய இனத்தின் மதத்தலைவர்கள், சமூகத் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என அனைவரும் அமைதி வழியில் போராடிய வேளையில், திட்டமிட்டு வன்முறையைப் பிரயோகித்துக் கைதுசெய்ததை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றுள்ளது.

(அ-26)



## 60 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதி

வவுனியா,டிசெ.29

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால், டித்வா பேரிடரால் பாதிக்கப்பட்ட, வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முத்துமாரி நகர், பரமகுளம் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு உலருணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலருணவுப்பொருள்கள் பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று பயனாளிகளுக்கு உலருணவுப்பொருள்களை வழங்கினார்.

(க-66)

**வேலைவாய்ப்பு**

- முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் மற்றும் தமிழ் ஆசிரியர்
- முன்பள்ளி இணைப்பாளர்
- கணக்காளர் (HNDA முடித்தவர்கள்)
- பாடசாலை சுத்திகரிப்பாளர், பாதுகாவலர் (பெண்கள்)
- வாகன ஓட்டுனர் மற்றும் அலுவலக உதவியாளர் (35 வயதிற்கு உட்பட்ட ஆண்கள்)
- MS Office, Photoshop, Page Maker, Corel Draw என அனைத்தும் தெரிந்தவர்கள் (ஆண்கள், பெண்கள்)

நேர்முக தேர்வு நடைபெறும் இடம் :

Little Master's Preschool

சிவபதி

கே.கே.எஸ் றோட், இணுவில்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி : 30.12.2025 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை நடைபெறும்.

தொடர்புகளுக்கு:- 076 073 7397

(CS/60284) J-1

# பாதீடுகளைத் தோற்கடிப்பதால் அரசுக்குப் பாதிப்பு இல்லை!

## பிரதியமைச்சர் மஹிந்த தெரிவிப்பு


கொழும்பு, டிசெ.29

உள்ளூராட்சிமன்றங்களின் வரவு - செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்படுவதன்மூலம் அரசாங்கத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. இவ்வாறு தோற்கடிக்கப்படுவது திசைகாட்டி யின் வரவுசெலவுத் திட்டம் அல்ல, மக்களின் வரவு - செலவுத் திட்டமே எனப் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோற்கடிக்கப்பட்ட கொழும்பு மாநகரசபையின் வரவு- செலவுத் திட்டத்தில் அடுத்த ஆண்டுக்காக முன்வைக்கப்பட்ட பெருமளவிலான திட்ட முன்மொழிவுகள் உள்வாங்கப்பட்டிருந்தன. இந்த உள்ளூராட்சிமன்றங்களினூடாக மக்களுக்கு வழங்கப்படவேண்டிய சேவைகளைச் சிறந்த முறையில் வழங்குவதற்காகவே இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கு உறுப்பினர்கள் வாக்களிப்பது, அவர்களை உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களாக்குவதற்கு வாக்களித்த மக்களுக்கு எதிராகச் செயற்படுவதாகும். நாட்டில் கணிசமான அளவிலான திட்டங்களைச் செயற்படுத்தத் திட்டமிட்டிருந்த வேளையிலேயே புயல் வந்தது. எனினும் சவால்களுக்கு மத்தியிலும் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது -என்றார்.

(ச-இ)



சாவகச்சேரி நகரசபை கல்வயல் வட்டார உறுப்பினர் இ.யோகநாதன் தனது இரண்டு மாத ஊதியக் கொடுப்பனவில் வட்டாரத்திலுள்ள பெருங்குளம் பிள்ளையார் கோவில் பொதுக் கிணற்றுக்கு கம்பிவலை அமைத்து கடந்த வெள்ளிக்கிழமை வழங்கினார். (ச-41-9)

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் 05 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு**

- ❖ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடிப் பாதையுடன்
- ❖ யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமையில்
- ❖ அல்லைப்பிட்டி செல்லும் பிரதான வீதி காப்பற் முகப்புடன்
- ❖ அல்லைப்பிட்டி தேவாலயம் 100m தூரம்
- ❖ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் 300m தூரம்
- ❖ அரச தனியார் போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் வீதி.
- ❖ வீடுகள் கட்டுவதற்கும், வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ❖ வீதி முகப்புடன் ஒரு பரப்பின் விலை 1,000,000/=, (பத்து லட்சம்)
- ❖ இரண்டாம் காணி ஒரு பரப்பின் விலை 900,000/=, (ஒன்பது லட்சம்)
- ❖ முன்றாம் காணி ஒரு பரப்பின் விலை 800,000/=, (எட்டு லட்சம்)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்பு: 076 860 2770 / 076 987 8617

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.